## சுற்றாடல் அமைச்சு

# தேசிய குளிர்மைப்படுத்தல் கொள்கை – 2021 தொடர்பிலான பொதுமக்களின் கருத்துக்கள்

ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டம் (UNEP) மற்றும் கொள்கை ஆய்வுகள் நிறுவகம் (IPS) என்பவற்றுடன் இணைந்து சுற்றாடல் அமைச்சானது இலங்கை சார்பில் தேசிய குளிர்மைப்படுத்தல் கொள்கையொன்றை வகுப்பதற்கான முன்னெடுப்பொன்றை மேற்கொண்டுள்ளது. ஓசோன் படையைக் குறைக்கும் பதார்த்தங்கள் தொடர்பான மொன்றியல் உடன்படிக்கைக்கான தரப்பொன்றாக, இலங்கை அரசாங்கமானது ஐதரோகுளோரோபுளோரோ காபன்களை (HCFCs) கட்டங்கட்டமாக இல்லாமற்செய்வதுடன், ஐதரோபுளோரோ காபன்களை (HFCs) கட்டங்கட்டமாக குறைக்கும் திட்டங்களை அமுல்படுத்துவதற்கான கடப்பாட்டைக் கொண்டுள்ளது. நாட்டினது துரிதமாக அதிகரிக்கும் குளிர்மைப்படுத்தல் தேவைகளை காலநிலை – நட்புறவான விதத்தில் தீர்ப்பதற்கு துணைபுரிந்து இலங்கையில் குளிர்மைப்படுத்தலுடன் தொடர்புற்ற பிரச்சினைகள் தொடர்பான கொள்கை நடவடிக்கைகளை வழிப்படுத்துகின்ற பிரதான கொள்கை ஆவணமாக தேசிய குளிர்மைப்படுத்தல் கொள்கை அமையும். உணவு விரயத்தைக் குறைத்தல், ஆரோக்கியத்தை மேம்படுத்தல், மற்றும் குளிர்மைப்படுத்தலுக்கான மேம்படுத்தப்பட்ட அணுக்கத்திற்கூடாக உற்பத்தித்திறனை அதிகரித்தல், அக்கறைதாரர்கள் சார்பில் அதிகரித்த வலுசக்தி வினைத்திறனுக்கூடாக செலவினை மிச்சப்படுத்தி வழங்குதல், மற்றும் பச்சைஇல்ல வாயு உமிழ்வுகளைக் குறைத்தல், அதேவேளை உறுதிமிக்க மற்றும் கூடுதல் நிலைபேறான வலுசக்தி முறைமையொன்றையும் தூய்மைமிக்க வளியையும் உண்டாக்குதல் என்பவற்றுக்கான வழிகாட்டல்களை வழங்குவதே இக்கொள்கையின் உத்தேசமாகும்.

தேசிய குளிர்மைப்படுத்தல் கொள்கை வரைவானது (2021) அமைச்சின் www.env.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பொதுமக்களின் கருத்துக்களுக்காகப் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் தங்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் 2021.12.23 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ பின்வரும் முகவரிக்கு அல்லது மின்னஞ்சலிற்கு பெற்றுக்கொள்வதற்கு அமைச்சு எதிர்பார்க்கின்றது.

தபால் முகவரி: பணிப்பாளர்
வளி வள முகாமைத்துவம் மற்றும் தேசிய ஓசோன் அலகு
சுற்றாடல் அமைச்சு
“சொபாதம் பியச”
இல. 416/சீ/1
ரொபேர்ட் குணவர்தன மாவத்தை
பத்தரமுல்லை

மின்னஞ்சல்: noulanka@gmail.com

தொலைபேசி : 0112034218

**வைத்தியர். அனில் ஜாசிங்க**
செயலாளர்
சுற்றாடல் அமைச்சு
2021.12.08